மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Festivals and Rituals of Marutha Thinai

N. Vadivukarasi

Assistant Professor, Department of Tamil, Sanghamam College of Arts and Science, Annamangalam, India

Manuscript ID : **MT196A0110**

Volume : **3**

Issue : **1**

Month : **March**

Year : **2023**

Received: 03.01.2023
Revised: 04.02.2023
Accepted: 17.02.2023
Published: 20.02.2023

Pages : 49-54

DOI: 10.5281/zenodo.7656107

ABSTRACT:

The main purpose of the research paper is to illustrate poetics of inner and outer meanings of Sangam literature, which build philosophy of human life, and we can perceive from the five kinds of land and the methods rituals of the people especially from Marutha Thinai.

KEYWORDS:

Marutha Thinai, Rituals, Indra festival, Beliefs

மருதத்திணை மக்களின் விழாக்களும் சடங்குகளும்

நா. வடிவுக்கரசி,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, சங்கமம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அண்ணமங்கலம், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

சங்க இலக்கியத்தின் பாடுபொருள் அகம், புறம் என இருவகையில் அமைத்து மனித வாழ்க்கைக்கான வாழ்வியலைத் கட்டமைக்கின்றன. அக்காலத்தில் மக்களின் வாழ்வியலை ஐந்திணைகளின் வழியாக அறிய முடிகிறது. இதில் மருதத்திணை மக்களின் விழாக்கள் பற்றியும், அவர்களின் சடங்கு முறைகள் பற்றியும் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கருச்சொற்கள்

மருதத்திணை, சடங்குமுறை, இந்திரவிழா, நம்பிக்கைகள்

முன்னுரை

சங்க இலக்கிய நூலான எட்டுத்தொகையில் அகநூல்களில் வரும் மருதத்திணையில் நம் முன்னோர் மேற்கொள்ளும் விழாக்களும், சடங்குகளும் அவர்களின் பண்பாட்டை வெளிப்படுத்தக்குடியவையாக உள்ளன. இவ்விழா அவர்களின் நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்த்தப் படுகின்றது. மருதத்தினையில் மக்கள் மேற்கொள்ளப்பட்ட விழாக்கள் சடங்குகள் பற்றி ஆராயும் விதமாக ஆய்வுக்கட்டுரை அமைகிறது.

மருதத்திணை மக்களின் விழாக்கள் காட்டும் பண்பாடு

ஒரு நிலத்தில் நடத்தப்படும் விழாக்கள் அந்நிலப்பரப்பில் வாழும் மக்களின் பண்பாடடை வெளிப்படுத்துவனவாய் இருப்பதைக் காணலாம். மனித வாழ்வில் விழாக்கள் நடப்பதற்கு மனமகிழ்ச்சியுடன் கூடிய ஓய்வு நேரம் என்பது அவசியம். மருதத்திணை மக்களின் ஓய்வு நேரம் என்பது அறுவடைக்கு பின்தான் அப்போது அவர்கள் மனமகிழ்ச்சிக்காக தைத்திருநாள், மாசித்திருநாள், பங்குனி உத்திரம், சித்திரை திருவிழா, மாரியம்மன் தீமிதி திருவிழா போன்ற விழாக்கள் நடைபெறுவதைக் காணமுடிகிறது. அன்று நடைபெற்ற விழாக்களைப்பற்றி காண்போம்.

இந்திர விழா

மருதத்திணை மக்கள் மழை வேண்டி இந்திரனுக்கு விழா நடத்தினர் என்பதை

"இந்திர விழாவிற் பூவின் அன்ன"[1]

பாடல் மூலம் அறிய முடிகிறது.

இவ்விழா 28 நாட்கள் நடைபெறுவதாக காப்பிய இலக்கியமான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்கள் மூலம் அறிய முடிகிறது.

சித்திரை திங்களில் நிறைமதி நாளில் இவ்விழா நடைபெற்றுள்ளது. காவிரியின் புண்ணிய நன்னீரால் இந்திரன் நீராட்டபட்டதாக சிலப்பதிகாரத்தின் மூலம் அறியமுடிகிறது.

"தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர்ப் பொற்குடத்தேந்தி
மண்ணக மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீராட்டி"[2]

என்ற பாடல் மூலம் அறியலாம்.

புனலாடு விழா

மருதப்பாடல் பலவற்றில் தலைவன் பரத்தையருடன் சேர்ந்து புனலாடிய செய்தி காணப்படுகிறது.

தலைவன் பரத்தையோடு வேழக்கரும்பாலாகிய வெள்ளிய தெப்பத்தில் களிறும் பிடியும் போல முகமலர்ச்சியுடன் புனலாடியதும் அகநானுறு பாடல் 6 மூலம் அறியலாம்.

"பூழி நாட்டு மக்கள் யானையை பழக்குவர்

..

யானைபோல் பழகிக்கொண்டு நேற்று நீராடினாய்"[3]

இளம் ஆடவரும் மகளிரும் சேர்ந்து புணலாடி மகிழ்வதை அரசனே கண்டு களிப்பதும் உண்டு.

சிறு தெய்வ வழிபாடு

நாட்டுப்புறங்களில் வாழும் உழைக்கும் மக்களின் வழிபாடு தெய்வம் காளி, கருப்பன், முனியன், மாடன் போன்ற சிறு தெய்வங்களே ஆகும்.

தன் மகளுக்கு உற்ற நோயை தணிக்கும் பொருட்டு துறையின் கண் நிலைபெற்ற தெய்வத்திற்குக் கையுறைக் பொருளாக கள்ளையும், மாலையையும் படைக்கின்றாள் ஒரு தாய்.

"கள்ளும் கண்ணியும் கையுறையாக
நிலைக்கோட்டு வெள்ளை நாள் செவிக்"[4]

என்ற பாடல் மூலம் அறியலாம்.

மருதத்திணையில் நடைபெற்ற கூத்துகள்

பெண்கள் மேற்கொள்ளப்படும் கூரவைக்குத்து துணங்கைக்குத்து பற்றி அகப்பாடல் கூறுகின்றது.

பெண்கள் எழுவரோ எண்மரோ ஒன்பதின்மரோ கைக்கோத்தும் கொண்டு வட்டமாக நின்று ஆடும் கூத்தையே கூரவைக்குத்து என்பர். இதில் பெண்கள் தங்கள் பாடல் வாயிலாக ஏதேனும் ஒரு செய்தியைச் வெளிப்படுத்துவர்.

"வெள்ளிவிழாத் தொடிமென் கருப்பு உலக்கை
வள்ளி நுண் இடைவயின் நுடங்க ...

...

காஞ்சி நிழல் தமிர்வளம் பாடி ..."[5]

பெண்கள் நுண்ணிய வேலைப்பாடமைந்த அழகிய குடத்தினை நடுவில் வைத்து தம் கணவரது நற்பண்பில்லாத பரத்தமை ஒழுக்கத்தைப்பாடி விரிந்த புங்கொத்துக்களுடைய காஞ்சி மரத்தின் நிழலில் குரவை ஆடியதாக அறிகிறோம்.

சடங்குகளும் நம்பிக்கைக்களும்

ஆதித்தமிழர்களின் பண்பாட்டில் தெய்வம் பற்றி நம்பிக்கைகள் இருந்தன. இன்றைய பகுத்திறவின் பார்வையில் முடநம்பிக்கைகள் எனக்கூறத்தக்க நம்பிக்கைகள் அம்மகளிடம் வேருன்றியிருந்தன. எனவே சடங்குகளை வெறும் அறியாமை எனக்கொள்ள இயலாது. அது மனோத்தத்துவமுறையில் செய்யப்போகும் செயலுக்கு வழிகாட்டியாக அமைகிறது.

மழைச்சடங்கு

மருதநில மக்கள் மழைக்காக செய்யும் சடங்கை பரிபாடல் கூறுகிறது.

> **“நத்தோடு நள்ளி நடை இரவு வய வாளை**
> **பித்தி அலையில் விளைக! பொலிக! என்பர்”[6]**

சங்கு, நண்டு, இறவு, வாளை போன்றவற்றை கையால் பிடித்து நீரில் இட்டனர் என்பதை அறிய முடிகிறது. இந்தப்பழக்கம் இன்றளவும் நடைபெறுகின்றது.

விதைப்புச்சடங்கு

விதைப்புக்கு முன் மந்திர உச்சாகடனம் செய்தனர். திருமுருகாற்றுபடை விவரிக்கும் “வேலன் வெறியாடல்” விதைப்புக்கு முந்தைய சடங்காகவே தோன்றுகிறது. பலியிடப்பட்ட மறியின் குருதியில் விதையைத் தோய்த்து விதைக்கின்றனர். இரத்தம் உயிர் சக்தியின் அறிகுறி இரக்கத்தில் விதை நனைக்கபட்டால் வளரும் என்பது அக்கால நம்பிக்கை ஆகும்.[7]

மணச்சடங்கு

பெண்ணையும் ஆணையும் இணைத்து ஒன்றாக இல்லறத்தில் ஈடுபட வைக்கும் திருமண நிகழ்வு சமுதாயத்தில் பலரறிய செய்யப்பட வேண்டியது எனக் கருதப்பட்டது.

> **“நேரிடை முன்கை பற்றி நுமர்தர**
> **நாடறிய நன்மணம் அயர்கம்”[8]**

என வரும் தொடரால் அறியலாம்.

இந்த சடங்குமுறை இன்றைய மக்களிடையே இருப்பதை காணலாம்.

ஈமச்சடங்கு

பெற்றோர் இறந்தப்பின் அவர்தம் ஆத்மா அமைதி பெற பிள்ளைகள் செய்யும் சடங்கே ஈமச்சடங்கு எனப்படுகிறது. ஆண் குழந்தை பெற்றவர்கள் இவ்வுலகில் புகழ்பெற்றவர்கள் இவ்வுலகில் புகழ்பெற்று மறுஉலகம் போவர்கள். ஏனெனில் ஆண் குழந்தைக்குத்தான் பெற்றோருக்கு ஈமக்கடன் செய்து பிரதிக்கடன் நிறைவேற்றும் தகுதி உண்டு கீழ்வரும் பாடல் மூலம் அறியலாம்.

“இம்மை உலகத்து இசையோடும் விளங்கி
மறுமை உலகமும் மறு இன்று எய்து
செறுநரும் விழையும் செயிர்நீர் காட்சிப்
சிறுவர்ப் பயந்த செம்மலோர்”[9]

என்கிறது அப்பாடல் இன்றும் கூட ஈமச்சடங்கு செய்யும் உரிமை மகனும் உள்ளதால் புதல்வனைப் பெற்றவர்களே இம்மை மறுமை என இரு உலகத்திலும் சிறப்புடையவர் என்ற நம்பிக்கை வலியுறுப்படுகிறது.

முடிவுரை

பண்டைக்காலத்தில் நடைபெற்ற விழாக்களும், சடங்குகளும் இன்று காணப்படுதல் போன்றே மக்களின் நம்பிக்கையின் அடைப்படையில் நிகழ்த்தப்பட்டன என்பதையும் சங்க இலக்கிய பாடல்கள் வேறு எங்கிலும் காணப்படாது அகநானூற்றில் மட்டுமே இடம்பெறும் பண்டைய திருமணச்சடங்கு இன்று போல் ஆரியமயமாக்கப்பட்ட சமயச்சடங்காக இருந்தது என்பதையும் ஒருவர் இறந்தப்பின் மேலோகம் போவார் அவருக்காக அவரின் புதல்வர்கள் ஈமச்சடங்கு செய்ய வேண்டும் என்ற நம்பிக்கை பண்டைய காலம் தொட்டே தமிழ்ச் சமுதாயத்தில் நிலவிவந்தது என்பதை இதன் மூலம் அறியலாம்.

அடிக்குறிப்பு

1. ஐங்குறுநூறு. 621
2. சிலப்பதிகாரம் - இந்திரவிழா. 165-168
3. அகநானூறு. 6
4. அகநானூறு. 156
5. அகநானூறு. 286
6. பரிபாடல். 10
7. வாழ்வியல் நெறிகள். சி, பாலசுப்பரமணியம்
8. குறிஞ்சிக்கலி. 232
9. அகநானூறு. 66

துணைநூற்பட்டியல்

1. வி, நாகராசன் உரையாசிரியர். *ஐங்குறுநூறு*. சென்னை, கு வெ பாலசுப்பிரமணியன் பதிப்பகம், நியூ டிச்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2010.
2. ப, சரவணன். *சிலப்பதிகாரம் இந்திரவிழா*. சந்தியா பதிப்பகம், 2008.
3. வி, நாகராசன், உரையாசிரியர். *அகநானூறு*. சென்னை, கு வெ பாலசுப்பிரமணியன் பதிப்பகம். நியூ டிச்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2010.
4. சி, பாலசுப்பிரமணியன். *வாழ்வியல்நெறிகள்*. சென்னை, நறுமலர்பதிப்பகம், 1990.
5. வி, நாகராசன், உரையாசிரியர். *குறிஞ்சிக்கலி*. சென்னை, கு வெ பாலசுப்பிரமணியன் பதிப்பகம். நியூ டிச்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 2010.
6. சி, பாலசுப்பிரமணியன். *தமிழர்திருமணமுறைகள்*. சென்னை, நறுமலர்பதிப்பகம், 1990.

REFERENCES

1. V, Nagarasan Text-editor. *Ingurunooru*. Chennai, K V Balasubramanian Publications, New Century Book House Private Limited, 2010.
2. P, Saravanan. *Silapathikaram Indhiravila*. Santhiya Publications, 2008.
3. V, Nagarasan Text-editor. *Agananooru*. Chennai, K V Balasubramanian Publications, New Century Book House Private Limited, 2010.
4. C, Balasubramaniyam. *Vazhviyal Nerigal*. Chennai, Narumalar Publications, 1990.
5. V, Nagarasan Text-editor. *Kurinjikali*. Chennai, K V Balasubramanian Publications, New Century Book House Private Limited, 2010.
6. C, Balasubramaniyam. *Thamizhar Thirumanamuraigal*. Chennai, Narumalar Publications, 1990.